பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 04 திங்கட்கிழமை 20.11.2023 கதிர் 374

## இனி இது ரகசியம் அல்ல!

அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியன கட்டாயம் நடக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருப்பதைத் தொடர்ந்து, தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை பற்றிய 'உருட்டல்கள்' மீண்டும் தொடங்கியுள்ளன. யாழ். நகரில் உள்ள தந்தை செல்வா அரங்கத்தில் இது தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூகக் குழு என்ற பெயரில் ஊடக நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த மக்கள் முறைப்பாடு என்கிற நிகழ்ச்சி சனிக்கிழமை நடந்தது.

தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படவேண்டும் என்று வலியுறுத்துவதுதான் இந்த அழைப்பின் நோக்கம் என்று அதன் தலைவராக அழைக்கப்பட்டிருந்த பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். வழக்கம்போல ☞2

# பொருளாதார வங்குரோத்து நிலைக்கு சஜித் கட்சியும் ஜேவிபியும்கூட காரணம்

## வரி நீக்கத்தை அவர்களும் ஆதரித்தனர் என்கிறார் நாமல்



இலங்கையின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைக்குச் சென்றதற்கு ராஜபக்ஷக்கள் காரணம் என்றால், அதில் ஐக்கிய மக்கள் கட்சிக்கும் தேசிய மக்கள் கட்சிக்கும் பங்கிருக்கின்றது, ராஜபக் ஷக்களின் ஆட்சி கொண்டு வந்த வரவு செலவுத் திட்டத்தில் வரிகள் குறைக்கப் ☞2

## சுகாதார அமைச்சின் செயலாளராக மருத்துவர் பாலித இன்று பதவியேற்பு

சுகாதார அமைச்சின் செயலாளராக விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இன்றையதினம் அவர் பதவியேற்கவுள்ளார்.

விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக சில காலம் செயற்பட்டிருந்ததோடு, உலக சுகாதார ஸ்தாபனத்தின் உயர் பதவிகளையும் வகித்திருந்தார்.

முன்னதாக, சுகாதார ☞2

### சொந்த மண்ணில் இந்தியாவை தோற்கடித்து

# உலகக் கிண்ணத்தை மீண்டும் வென்றது ஆஸ்திரேலிய அணி



இந்தியாவை அதன் சொந்த மண்ணில் படுதோல்வியடைய வைத்து ஆறு விக்கிட்டுக்களால் வெற்றி பெற்று ஆறாவதுதடவையாகவும் உலககிண்ணப் போட்டியில் வென்றது ஆஸ்திரேலியா.

அவுஸ்திரேலிய அணி ஏற்கனவே 1987, 1999, 2003, 2007, 2015, ஆகிய ஆண்டுகளில் உலகக் கிண்ணவெற்றியாளராக இருக்கின்றது. ஆசிய மண்ணில் அவுஸ்திரேலியா தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்திய இந்த வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இம்முறை, உலக கிண்ணத்தொடரில் ☞2

## ராஜபக்ஷக்களே மக்களுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்தனர்

### அவர்களை தீயவர்களாக காட்டுகிறார்கள் என பெரமுன எம்.பி. சந்திரசேன கவலை

ராஜபக்ஷக்களே இந்த நாட்டில் உள்ள 2.2 கோடி மக்களுக்கும் சுதந்திரத்தினைப் பெற்றுக் கொடுத்தார்கள். அத்தகையவர்களைத் தீயவர்களாகக் காட்டும் நிலமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்று பொதுஜனபெரமுனவின் அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்றையதினம் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் ☞2

## சனிக்கிழமை கைதான 22 இந்திய மீனவர்களும் சட்ட நடவடிக்கைகள் ஏதுமின்றி உடன் விடுதலை

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றத்திற்காக சனிக்கிழமை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 22 பேரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படாமல் உடனடியாகவே விடுவிக்கப்பட்டனர்.

மீனவர்கள் பயணித்த படகில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக அவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் இழுத்து வரப்பட்டனர் எனவும் நேற்று சனிக்கிழமையே மீனவர்களின் படகு பழுது பார்க்கப்பட்டு, கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டனர் எனவும் இலங்கை கடற்படை ஊடகப்பேச்சாளர் கேப்டன் இந்திக டிசில்வா தெரிவித்தார்.

முன்னதாக இந்திய மீனவர்கள் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் வழக்கம்போல கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள ☞8

## பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களை கண்டறிய ஜனாதிபதி விசாரணைக்குழு வேண்டும்

### ஜனநாயகக் கூட்டணித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடிகளுக்கு ராஜபக்ஷக்கள் காரணம் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும் அதற்காக அவர்களுக்கு என்ன தண்டனை என்று தெரிவிக்கவில்லை. அவ்வாறான ஒரு சூழலில் ஜனாதிபதி விசாரணைக் குழுவொன்றை நியமித்து குறித்த விடயம் சம்பந்தமாக சந்தேகம் உள்ள நபர்கள் அனைவரிடத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணமான ராஜபக்ஷக்கள் உள்ளிட்டவர்கள் இருந்தார்கள் என்பதால் ☞8

## மின்சாரம், எரிபொருள் உற்பத்தி இனி அத்தியாவசிய சேவைகள்

மின்சாரம், எரிபொருள் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதி செயலாளர் ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்கவால் மேற்படி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் ☞8

## பூகோள அரசியல் நலனுக்கு இடமளிக்கமாட்டாராம் டக்ளஸ்

பூகோள அரசியல் நலன்களுக்கு இடமளிக்கப்போவதில்லையென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் உரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் வடக்கு உள்ளிட்ட கடற்பரப்பில் முதலீடுகளைச் செய்வதற்கு தனியே சீனா மாத்திரம் விரும்பம் தெரிவிக்கவில்லை. விசேடமாக, ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா உள்ளிட்ட ☞2

# ஜனாதிபதி பிரதமருடன் இன்று சீன அதிபரின் தனி குழு பேச்சு

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன ஜனாதிபதி ஷீ ஜின் பிங்கின் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமர் தினேஷ் குணவர்தன சபாநாயகர் மஹிந்த யாப்ப அபேவர்த்தன உள்ளிட்டவர்களை இன்றையதினம் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

நாளை வரையில் கொழும்பில் தங்கி இருக்கவுள்ள அவர்கள் கொழும்பு துறைமுக நகர் திட்டம் ☞2



## பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நலிவடைந்தோர் மீது அக்கறையாம்

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கும் வேளையிலும், நாட்டு மக்களின் நலிவடைந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நிகழ்நிலை முறையில் 'உலக தெற்கின் குரல்' அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மாநாடு இரண்டாவது ☞2

## இனி இது .....

ஊடகங்களில் அரசியல் கட்டுரைகள் வரைபவர்கள் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். அத்தோடு அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சுமந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சிவிகே. சிவஞானம், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி இணைத் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தேசிய அமைப்பாளர் துளசி, முன்னாள் மேயர் ஆர்னோல்ட், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஐங்கரநேசன், அருந்தவபாலன் ஆகியோர்கலந்துகொண்டிருந்தனர்.

அவர்களை முன்வரிசைகளில் அமர வைத்தபடி ஒற்றுமையின் அவசியம் பற்றி மேடையில் வகுப்பெடுக்கப்பட்டது. அதை எந்தத் தலைவராவது காதில் எடுத்தார்களா என்பது தெரியவில்லை. ஒற்றுமை பற்றி அவர்கள் பெரிதாக அலட்டிக் கொண்டதாகவும் இல்லை. அதிலும் சிலர், யார் தேவை என்பதை மக்களே முடிவு செய்யட்டும், கொங்கிரஸைவிட்டு தந்தை செல்வா பிரிந்தபோது யாரைத் தமது பிரதிநிதிகளாக்குவது என்பதை மக்களே முடிவு செய்தார்கள், அதுபோல இப்போதும் மக்களே அதனை முடிவு செய்துகொள்ளட்டும், ஒற்றுமை ஒற்றுமை என்று பேசுவதால் என்ன வந்துவிடப்போகின்றது என்று பின்னர் தனிப்பட்ட உரையாடல்களில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

அப்படித் தலைவர்கள் மட்டுமல்ல இந்த ஒற்றுமை நிகழ்வில் மக்களும்கூட அக்கறை ஏதும் கொண்டிருந்தார்கள் என்பதற்கான அறிகுறிகள் இல்லை. இந்த நிகழ்வு குறித்து இரண்டு வாரங்களுக்கு முன்னரே தகவல்கள் பரப்பப்பட்ட நிலையிலும்கூட கூட்டத்தில் மிகக் குறைந்தளவானோரே கலந்துகொண்டிருந்தனர். அதிலும் பொதுமக்கள் என்கிற நிலையில் கலந்துகொண்டிருந்த கட்சி ஆதரவாளர்கள் மத்தியில்கூட 50 வயதுக்குக் குறைந்த ஒருவரைத் சல்லடைபோட்டுத்தான்கண்டுபிடிக்க வேண்டிய நிலை. 30 வயதுக்குக் கீழானஒருவரைமருந்துக்கும்கூடக் கண்டுபிடிக்க முடியாத நிலை.

தேர்தல் என்றால் ஒற்றுமை என்பதும், நாடாளுமன்றக் கதிரைகளைப் பெற்ற பின்னர் கூட்டணிக்குள்ளே குத்துவெட்டுப்படுவதும் அடுத்த தேர்தல் நெருங்கும்போது நாங்கள் பிரியப்போகிறோம் என்று பரபரப்புக் கிளப்புவதும் பிறகு ஒற்றுமை என்று கூறிக்கொண்டு மீண்டும் வாக்குக் கேட்டுவருவதுமாக இந்த அரசியல்வாதிகள் கடந்த 14 வருடங்களில் ஆடிய அலங்கோல ஆட்டம் இவர்கள் மீதிருந்த நம்பிக்கையையும் அரசியல் மீதிருந்த ஈடுபாட்டையும் மக்களுக்கு அடியோடு இல்லாமல் செய்துவிட்டது என்பதே இந்தக் கூட்டத்திற்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தைப் பறைசாற்றப் போதுமானது. கூட்டத்தில் முக்கிய உரையாற்ற இருந்த பேராசிரியரே அதைவிட பாறனை முடித்த நிலையில் சூரன்போர் முக்கியம் என்று அங்குபோய்விட்டுத்தான் கூட்டத்திற்கே வந்தார் என்கிற நிலையில்,தமிழ்மக்களிடம்இனியும் இந்த ஒற்றுமைப் பருப்ப வேகும் என்று எனக்குப் படவில்லை.

இவர்கள்ஒற்றுமையாகநின்றாலும் தனித்து நின்றாலும் இவர்களால் ஆகப்போவது ஒன்றுமில்லை, சிங்களக் குடியேற்றங்களையோ பௌத்தத்தின் ஆக்கிரமிப்பையோ இராணுவத்தின் இருப்பையோ பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலையோ இவர்களால் தடுத்து நிறுத்தமுடியாது, தாங்கள் நாடாளுமன்றக் கதிரைகளைப் பிடித்தபின்னர் இவற்றையெல்லாம் நிறுத்த உங்கள் நாளாந்த வருமானத்தைத் தியாகம் செய்து கடையடைப்பு நடத்துங்கள் என்றுகூறிக்கொண்டு மீண்டும் மக்களிடமே வந்து நிற்பார்கள் என்கிற தெளிவு அவர்களுக்கு நன்றாகவே ஏற்பட்டுவிட்டதால் ஒற்றுமைக் கதைகளும் தேர்தல் தேசியமும் இனிவரும் காலங்களில் அவர்களுக்கு ஒரு ஊடகப் பொழுது போக்காக மட்டுமே தோன்றும் என்று படுகின்றது.

"எத்தனைகாலம்தான்ஏமாற்றுவார் இந்த நாட்டிலே.... இந்த நாட்டிலே..." என்கிற பாடல் வரிகள்தான் காதில் ஒலிக்கிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபோதுஅவற்றைஆதரித்தவர்கள் இவர்களேஎன்றுஅம்பாந்தோட்டை மாவட்டநாடாளுமன்றஉறுப்பினரும் மகிந்த ராஜபக் ஷவின் மூத்த மகனுமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சிக் காலத்தில் பொறுப்பு வகித்த தற்போதைய ஐக்கியமக்கள்கட்சித்தலைவர்களும் அந்த ஆட்சியை ஆதரித்த ஜேவிபி உறுப்பினர்களும்கூடப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பொருளாதார வங்குரோத்து நிலையை நாடு அடைந்தமைக்கு ராஜபக்ஷக்கள் உட்பட கடந்த ஆட்சியின்உயரதிகாரிகளேகாரணம் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்குறித்தும்அதனடிப்படையில் ராஜபக் ஷக்களின் குடியுரிமையைப் பறிக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுவது தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷதோற்கடிக்கப்பட்ட போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் 7% ஆக இருந்தது, ஆனால் 2020ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது பொருளாதார வளர்ச்சி 2% ஆகக் குறைந்தது.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சி வரிகளைக் குறைக்கும் என்று தனது தேர்தல் அறிக்கையிலேயே உறுதியளித்திருந்தது. அதனடிப்படையில் மக்களால் கொடுக்கப்பட்ட ஆணையின்படி வரிகளை குறைப்பதை எப்படித் தவறாகக் கருத முடியும் என்று ராஜபக்ச கேள்வி எழுப்பினார்.

தற்போதைய அரசு சர்வதேச நாணயநிதியத்தின்பரிந்துரைகளின் அடிப்படையில் வரிகளை அதிகரித்த போது பெறுமதி சேர் (வற்) வரிக் குறைப்புக்குஎதிராகநீதிமன்றத்திற்குச் சென்ற கல்வியாளர்கள் வீதியில் இறங்கிஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர். ஆனால் அன்று அப்படி யாரும் வரிக் குறைப்பை எதிர்க்கவில்லை.

கோட்டாபய ராஜபக்ச தனது ஆட்சியின்போதுகரிமஉரங்களைப் பயன்படுத்துதல் போன்ற தவறான தீர்மானங்கள் குறித்து மௌனமாக இருந்ததால், பொருளாதாரநெருக்கடி ஏற்பட்டது. தவறுகளில் இருந்து பாடம் கற்க வேண்டியது அவசியம்.

இந்த ஆட்சியின் வரவு செலவுத் திட்டம் மீதான விமர்சனங்களால் சில தனிநபர்கள் புண்படக்கூடும். அதேவேளை, எந்தவொரு ஆட்சியிலும் தவறுகள் இருப்பின், மக்களுக்காக அவற்றைச் சுட்டிக்காட்ட நான் தயங்கமாட்டேன். வரவு செலவுத் திட்டம் மட்டுமன்றி தற்போதைய ஆட்சி எடுக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் விமர்சிக்கவும் பிழைகளைச் சுட்டிக்காட்டவும் தயங்கப் போவதில்லை - என்றார்.

## பொருளாதார நெருக்கடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இந்தியாவில் ஆரம் பமாகியது, அபிவிருத்தி அடைந்துவரும் பல நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

முதல் முறையாக நடைபெற்ற 'உலக தெற்கின் குரல்' மாநாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தியாவின் தலைமைத்துவத்தையும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் முன்னுரிமைகள் தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதால் கிடைக்கக்கூடிய முன்னேற்றகரமானதாக்கத்தையும் வரவேற்றார்.

இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் நடைபெற்ற ஜி-20 உச்சிமாநாட்டின் வெற்றியை நினைவுகூர்ந்தஜனாதிபதி, அதனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் முன்னுரிமைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளை அறிந்துகொள்ள முடிந்ததாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதலாம் தவணைக் கடனைப் பெற்றுக்கொண்டமை மற்றும் இலங்கையின் இருதரப்புக் கடன் தொடர்பாக உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவினால் அடைந்துகொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டினார்.

படுகடன் தொடர்பிலான பிரச்சினைகளின் கடினத் தன்மையை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கான நிலையான தீர்வுகளை காண கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்என்றும்வலியுறுத்தினார்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டுநீண்டகாலவளர்ச்சிக்கான வெளிநாட்டுமுதலீடுகளைஈர்ப்பதும், உறவுகளை மேம்படுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

அதேபோல் தனது அண்மைய இந்திய விஜயத்தின் போது பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து வெளியிடப்பட்ட கூட்டுக் கொள்கையின் பலனாக பல்வேறுதுறைகளில்முன்னேற்றம் அடையும் வகையில் இரு நாடுகளினதும் உறவுகளை பலப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

டிஜிட்டல் மயமாக்கலில் இன்று இந்தியா வெற்றி கண்டுள்ளது. அத்துறை தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை பலப்படுத்திக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் வலுவான அரச சேவைக் கட்டமைப்புக்குள் டிஜிட்டல் மயமாக்கலின் வளர்ச்சியை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் சுட்டிக்காட்டினார்.

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த ஓய்வுபெறவுள்ள நிலையில், புதிய செயலாளராக தற்போது சுற்றாடல் அமைச்சின் செயலாளராக பணியாற்றி வரும் விசேட வைத்திய நிபுணர் அணில் ஜயசிங்கவை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும், தற்போது அந்த நகர்வு கைவிடப்பட்டு புதிய நியமனம் வைத்தியர் மஹிபாலவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த வொரு போட்டியிலும் தோல்வியுறாத அணியாக வலம் வந்த இந்திய அணியுடன் மோதிய ஆஸ்திரேலியா, ஏற்கனவே இந்தியாவிடம் தோற்றிருந்தது. எனினும் அஹமதாபாத்தில் பிரதமர் மோடி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று நடந்த இறுதிப்போட்டியில் இந்தியாவை படுதோல் வியடைய வைத்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்தி ரேலிய அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தொடக்கத்தில் அதிரடி காண்பிப்பதற்கு முயற்சித்தாலும் சொற்ப நேரத்திலேயே தடு மாற்றத் தொடங்கியது.

தொடக்க வீரர் ஷுப்மன் கில் மற்றும் ஷ்ரேயாஸ் ஐயர் ஆகியோர்தலாநான்குஓட்டங்களை மாட்டுமே பெற்று ஆட்டமிழந்தனர். ஆயினும் அணிக்குக் கைகொடுத்த விராத் கோலி 54 ஓட்டடங்களையும், கே.எல். ராஹுல் 66 ஓட்டடங்களையும் பெற்றுக் கொடுத்தனர். அணித் தலைவரும், தொடக்க துடுப்பாட்ட வீரருமான ரோஹித் சர்மா அதிரடியாக விளையாடி 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஆஸ்திரேலிய அணி சார்பில் மிச்சல் ஸ்டார்க் 3 விக்கெட்டுகளையும், ஜோஸ் ஹஷல்வூட் மற்றம் பட் கம்மின்ஸ் தலா 2 விக்கெட்டுகளையும்கைப்பற்றினர்.

பதிலுக்கு 241 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி தொடக்கத்தில்தடுமாறியது. எனினும் நான்காவது இலக்குக்குநிதானமான ஆட்டத்தினை வெளிப்படுத்திய ஆரம்பத்துடுப்பாட்டவீரரானடிராவிஸ் ஹெட் மற்றும்லபுசக்னே ஆகியோர் சிறந்த இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தி அணியை வெற்றுபெற வைத்தனர். ஹெட் 131ஓட்டங்களைப் பெற்றதோடு, மார்னஸ் லபுசக்னே ஆட்டமிழக்காது58ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஆஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 241 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இந்திய அணி சார்பில் ஜெஸ்பிரித் பும்ரா 2 விக்கெட்டுகளையும், மொஹமட் ஷமி மற்றும் மொஹமட் சிறாஜ் ஆகியோர்தலாஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக, ட்ராவிஸ் ஹெட் தெரிவானார். தொடராட்ட நாயகனான விராட் ஹோலி தெரிவானார்.

## ராஜபக்ஷக்களே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றபோது பொதுச்சொத்துக்கள் பெருமளவில் சேதப்படுகின்றன. இதனால் பொருளாதார ரீதியான பின்னடைவுகள் பெருமளவில் ஏற்படுகின்றன.

இந்த நிலையில், தற்போது போராட்டம் செய்தவர்கள் நல்லவர்களாகவும், ராஜபக்ஷக்களே தீயவர்களாகவும் காண்பிக்கப்படும் நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உண்மையில்ராஜபக்ஷக்களின் குடியுரிமையைப் பறிக்கவேண்டும் என்றுகோசமிடுபவர்கள்,அவர்களின் வாய்களால்தான் அவ்விதமான கருத்துக்களை குறிப்பிடகின்றனரா என்ற சந்தேகம் உள்ளது.

ஏனென்றால், ராஜபக் ஷக்களே இந்த நாட்டில் உள்ள 2.2 கோடி மக்களுக்கும் சுத்திரத்தினைப் பெற்றுக்கொடுத்தார்கள். அவர்களால்தான் நாட்டில் உள்ள அத்தனைபேரும்மூச்சுவிடுகின்றனர் என்பதை மறந்துவிடக்கூடாது - என்றார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாந்தோட்டையில் உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உட்பட பல்வேறு சீன முதலீட்டு திட்டங்கள் தொடர்பில் அரச தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளனர்.

அத்துடன், நேற்று கண்டி தலதா மாளிகை உள்ளிட்ட பல இடங்களுக்கும் அவர்கள் சென்று பார்வையிட்டனர்.

## பூகோளப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளும் ஆர்வத்தைக் கொண்டுள்ளன.

அண்மையில் பிரித்தானியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் என்னு டன் நடத்திய சந்திப்பின்போது பிரித்தானியாவும் இலங்கை கடற்பரப்பில் முதலீடுகளைச்செய்வதற்குமுயற்சிப்பதாக தெரிவித்ததோடு அதற்கான திட்ட முன்மொழிவையும்கோரியிருந்தார்.

அந்தவகையில், வெறுமனே சீனாவும், இந்தியாவும் தான் கடல் சார்ந்த விடயங்களில் முதலீடுகளைச் செய்வதற்கு ஆர்வம் காண்பிக்கின்றனஎன்றுதெரிவிப்பது தவறானதாகும்.

எம்மைப்பொறுத்தவரையில் எமது மக்களின் நலன்சார்ந்தும், நாட்டின் மேம்பாட்டை மையப்படுத்தியும் தீர்மானங்களை எடுப்போம். அதற்காக பூகோள போட்டி நலன்களுக்கு இடமளிக்கப் போவதில்லை என்றார்.



# இணை பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்


## அதிபர்களிடம் ஆளுநர் சாள்ஸ் வலியுறுத்து



இணைப்பாடவிதானசெயற்பாடுகளிலும் மாணவர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வட மாகாண அதிபர்கள் சங்கத்திடம், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது 'வட மாகாணத்தில் அதிகரித்துள்ள பாடசாலை இடைவிலகல், பிரத்தியேக வகுப்புகளுக்கு அதிக நேரத்தை செலவிடுதல், இணை பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பு குறைந்து செல்லுதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் தனது கவலையை வெளியிட்ட ஆளுநர், இவ்விடயங்களை மாற்றியமைக்க வேண்டும்' எனவும் தெரிவித்துள்ளார். மேலும் மாணவர்கள் மீது அதிகஅழுத்தங்களைப்பிரயோகிப்பதால்உளரீதியாக மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும், வாழ்கையின் அடுத்த நகர்விற்கு அது இடையூறாக அமைவதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் ஆளுநரின் ஆலோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த வட மாகாண அதிபர்கள் சங்கம், இவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வட மாகாண கல்வி மேம்பாட்டை முன்னெடுப்பதற்கு தேவையான 19 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றையும் ஆளுநரிடம் கையளித்துள்ளனர். (05)



# இலங்கையின் அரசியல் நிலைமை குறித்து ஜே.வி.பி. – இந்திய உயர்ஸ்தானிகர் சந்திப்பு

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் தற்போது எமது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி இந்தியாவுடன் கலந்துரையாடியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் வெள்ளிக்கிழமை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை சந்தித்தனர். இதன்போதே இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் தற்போது எமது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருடன் நீண்ட நேரம் கலந்துரையாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

இந்த உரையாடலில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதன்மைச் செயலாளர் எல்டோஸ் மத்யூவும் கலந்துகொண்டார்.

அதேவேளை ஜே.வி.பியின் தேசிய செயற்குழு உறுப்பினர் விஜித ஹேரத் என்னுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (05)

# நாட்டில் 75 தொடருந்துகள் 10 மாதங்களில் தடம் புரள்வு

இந்த வருடத்தின் கடந்த பத்து மாதங்களில் 75 ரயில்கள் தடம் புரண்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கொழும்பு புகையிரத வீதிகளில் 38 ரயில்கள் தடம் புரண்டுள்ளமையுடன், ரயில்; பாதைகளில் 37 ரயில்கள் தடம்புரண்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

கடந்த 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டை விட இந்த எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகிறது என்று ரயில்வே துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். ரயில் பாதையில் பயன்படுத்தப்படும் தண்டவாளங்கள் துருப்பிடித்து அழுகிப் போவதால் தடம் புரளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பேச்சாளர் தெரிவித்தார்.

இதுவரையில் ரயில் பாதைகளுக்குப் பயன்படுத்துவதற்குப் பத்தாயிரம் தண்டவாளங்களை ரயில்வே திணைக்களம் பெற்றுள்ளதுடன், மஹவ தொடக்கம் அனுராதபுரம் வரையிலான நவீனமயமாக்கப்பட்ட வடக்கு ரயில்வே பிரிவில் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட தண்டவாளங்கள் அகற்றப்பட்டுள்ளன என ரயில்வே தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேவேளை, இவ்வருட காலப்பகுதியில் ரயில் கடவைகளில் பயன்படுத்தப்பட்ட 346 பாதுகாப்பு கடவைகள் சேதமடைந்துள்ளதுடன், ரயில் கடவைகளைக் கடந்து செல்லும் சாரதிகள் கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்துவதே இதற்குக் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (05)

# உழவு இயந்திரம் கவிழ்ந்ததில் நாவலபிட்டியில் 8 பேர் காயம்

ஹற்றன் பிரதேசத்தில் இருந்து நாவலப்பிட்டி நோக்கி பயணித்த உழவு இயந்திரம் ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் காயமடைத்துள்ளனர். இந்த விபத்து சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உழவுஇயந்திரத்தில்இணைக்கப்பட்டுள்ள பின்புற பெட்டிப் பகுதி இயந்திரத்தை விட்டு கழன்று வீதியில் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள்திக்ஓயாஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என ஹற்றன் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# நானு ஓயா மக்களுக்கு புது வீடுகள் கையளிப்பு

நானுஓயா, கிளாரண்டன் தோட்டத்தில் தற்காலிக குடியிருப்புகளில் வசித்த குடும்பங்களுக்கு, குடிநீர், மின்சாரம், உட்கட்டமைப்பு உட்பட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகள், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானால் சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், அவர்களுக்கு பிரத்தியேக 'முகவரி' வழங்கப்பட்டு, வீடுகளுக்கு முன் வைப்பதற்கான தபால் பெட்டியும் வழங்கப்பட்டது.

நானுஓயா, கிளாரண்டன் தோட்டத்தில் தற்காலிக குடில்களில் வாழ்ந்துவந்த 30 குடும்பங்களுக்கு தனி வீடுகளை அமைப்பதற்கான வேலைத்திட்டம் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்பட்டது. (05)

# கோழி இறைச்சி, முட்டை விலைகளில் மாற்றம்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் குறைவடையும் என கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் தொடர்ச்சியாக தமது உற்பத்திகளை சந்தைக்கு அனுப்புவதால் முட்டையொன்று 35 - 40 ரூபாவிற்கு இடைப்பட்ட விலையில் விற்பனையாகும் சாத்தியம் காணப்படுகின்றது.

எனினும் வற் வரி அதிகரிப்பால் இறக்குமதி செய்யப்படும் கால்நடை தீவனத்தின் விலை அதிகரித்தால் இந்நிலை மாறலாம்.- இவ்வாறு அஜித் குணசேகர தெரிவித்தார். (05)

# தூக்கில் தொங்குவது போன்று பாசாங்கு செய்தவர் மரக்கிளை முறிந்து வீழ்ந்து சாவு

*யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் தூக்கில் தொங்குவது போன்று மனைவிக்குப் பாசாங்கு செய்தவர் மரக்கிளை முறிந்தமையால் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*இரு பிள்ளைகளின் தந்தையான 26 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*நெடுந்தீவுப் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மனைவியுடன் பேசியவாறு தான் தற்கொலை செய்வேன் என வேப்பமரத்தில் தூக்கிட்டு பாசாங்கு செய்துள்ளார்.*

*இதன் போது அந்தக் குடும்பஸ்தர் தூக்கை மாட்டியவாறு மரத்தில் இருந்து கீழே இறங்க முற்பட்ட வேளை வேப்ப மரக் கிளை முறிந்துள்ள நிலையில் தூக்கில் அகப்பட்டுள்ளார்.*

*இந்நிலையில், குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.*

*மேலும் அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)*

# இந்தியா – இலங்கை இடையிலான 9ஆவது கூட்டு இராணுவப் பயிற்சி



*இந்தியா- இலங்கை இடையிலான 9 ஆவது கூட்டு இராணுவ பயிற்சி புனேயில் இடம்பெற்று வருகின்றது,*

*'மித்ரா சக்தி -2023' எனும் கூட்டு இராணுவ பயிற்சி எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*120 வீரர்களைக் கொண்ட இந்திய படைப்பிரிவில் மராத்தா தரைப்படை பிரிவைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றுள்ளதுடன் இலங்கை தரப்பில் 53 தரைப்படை பிரிவைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.*

*இந்திய விமானப்படையை சேர்ந்த 15 வீரர்களும், இலங்கை விமானப்படையை சேர்ந்த 5 வீரர்களும் இந்த பயிற்சியில் பங்கேற்பதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது கூட்டு எதிர்வினைகளை ஒருங்கிணைப்பது இந்தப் பயிற்சியின் நோக்கமாகும். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மறந்துபோன கடன் மறுசீரமைப்பு

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 2024 வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதும் பன்னாட்டு நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டத்தின் இரண்டாம் கட்டம் கிடைக்கும் என்று ஆளும் தரப்பினர் அண்மைய நாட்களாகத் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றனர்.


நாணய நிதியத்தின் முதல் கட்ட நிதி கிடைத்த பின்னர் நடந்த மீளாய்வில் அரசின் வருமானம் அதிகரிக்கப்படவில்லை என்பதைக் காரணம் காட்டி, இரண்டாவது தவணை நிதி வழங்கப்படுவது தாமதமாகும்என்றுநாணயநிதியம்தெரிவித்திருந்தது. அதன் பின்னர் நடத்தப்பட்ட பேச்சுக்களில் அரச வருமானத்தை உயர்த்தும் வழிகள் குறித்து ஆளும் தரப்பால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் இரண்டாம் தவணை நிதியை விடுவிக்க நாணய நிதியம் அதிகாரிகள் மட்டத்தில் இணங்கிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனால்தான் நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாகவே இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்கிற விமர்சனங்களும் வருகின்றன. அத்தகைய வரவு செலவுத் திட்டம் நிறைவேறியதும் இரண்டாம் கட்ட நிதி நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கும் என்று ஆட்சியாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதார மீட்சிக்கு நாணய நிதியத்தின் இந்த இரண்டாம்கட்டநிதிமட்டும்போதுமானதல்ல.அண்மைக் காலமாக மறக்கப்பட்டுவிட்ட கடன்மறுசீரமைப்பும் மிக முக்கியமானது. இன்னும் சொல்லப்போனால் கடன் மறுசீரமைப்பு இன்றி பொருளாதார மறுசீரமைப்போ மீட்சியோ சாத்தியப்படப்போவதேயில்லை. இந்த விடயத்தில் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை ஆட்சியாளர்கள் உடனடியாக மேற்கொண்டார்கள். ஊழியர் சேம லாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் வட்டி வீதங்களைக் குறைத்து, தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி உள்நாட்டு கடன்மறுசீரமைப்புச் செய்யப்பட்டது.

அப்போது ஐப்பசி மாதத்திற்குள் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடையும் என்று அரசுத் தலைவரும் ஆளும் தரப்பினரும் நம்பிக்கை வெளியிட்டு வந்தனர். ஆனால், கார்த்திகை நடுப்பகுதியைத்தாண்டியபின்னரும்கூட வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் நம்பிக்கைதரும் வகையிலான எந்தவொரு தகவலும் இல்லை. சீனா தனது கடன்மறுசீரமைப்புக் குறித்து அறிவிப்பதற்காக மற்றைய நாடுகள் காத்திருக்கின்றன என்று சொல்லப்பட்டது. அதன் பின்னர் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத்திற்கு முன்னதாக, சீனக் கடனின் பெரும் பகுதிக்கான மறுசீரமைப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது. எனினும் அதன்பின்னரும்கூட வெளிநாட்டுக்கடன்மறுசீரமைப்பு ஒரு முடிவுக்கு வரவில்லை.

ஆளும் தரப்பினர் இப்போது அதனை விட்டுவிட்டு நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு கிடைக்கப்போகின்றது என்று கதைவிடத் தொடங்கியிருக்கிறார்கள். அந்த நிதி கிடைத்தாலும்கூட கடன் மறுசீரமைப்பு இறுதிசெய்யப்படாமல் இலங்கையால் எதிர்பார்க்கப்படும் பொருளாதார மீட்சியை நோக்கிப் பயணிக்கவே முடியாது. எனவே ஆளும் தரப்பினர் இது தொடர்பான உண்மைகளை உடனடியாக மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். அதுவே அவர்கள் மக்களுக்குச் செய்யும் மகத்தான பணியாக அமையமுடியும்.




(இனப்படுகொலையை நியாயப்படுத்த சமூக ஊடக பிரபலங்களை விலைக்கு வாங்கிய இஸ்ரேல். பாலஸ்தீனத்திற்கு எதிராக போலிச் செய்திகளை சமூக ஊடகத்தில் பரப்புவதற்கு சமூக ஊடக பிரபலங்களுக்கு இஸ்ரேலின் 'டிஜிட்டல் ஆர்மி' (Digital Army) பணம் கொடுத்து வருவது அம்பல மாகியுள்ளது)

# இஸ்ரேலின் நவீன 'டிஜிட்டல் ஆர்மி'

## விலைக்கு வாங்கப்பட்ட பிரபலங்கள்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

காசாவில் பாலஸ்தீன மக்களைப் படுகொலை செய்யத் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலின் இனப்படுகொலையை மறைத்து பாலஸ்தீனத்திற்கு எதிராக போலிச் செய்திகளை சமூகஊடகங்களில்பரப்புவதற்கு சமூக ஊடக பிரபலங்களுக்கு இஸ்ரேலின் 'டிஜிட்டல் ஆர்மி' (Digital Army) பணம் கொடுத்து வருவது அம்பல மாகியுள்ளது.

### இஸ்ரேலின் போலிப் பரப்புரைக் குழு

சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்தி வரும் கணக்குகளுக்கு (Media Influencers) இஸ்ரேல் அரசு சார்பில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல் மற்றும் மெசேஜ்களின் ஸ்கிரீன் ஷாட்கள் (screen shot) வெளியாகியுள்ளன.

இஸ்ரேலின் போலிப் பரப்புரைக் குழு HAMASi-sISIS மற்றும் StandWithIsrael என்ற ஹேஷ்டேக்குகளுடன் எக்ஸ் உள்ளிட்ட சமூக வலைத் தளங்களில் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்கள்.




அத்தியாவசிய மான உணவு, குடிதண்ணீர், மின்சாரம்,எரிபொருள், மருத் துவப் பொருட்களைத் தடுத்து சர்வதேச விதிகளை மீறி, இனப்படுகொலையில் ஈடுபட்டு வருகிறது.

### போர் குற்ற மறைப்பு

இஸ்ரேல் தனது போர் குற்றங்களையும் இனப்படுகொலையையும் மறைத்து உலக மக்களின் அனுதாபங்களைத் தனது பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காகவும், தனது பயங்கரவாதத்தை நியாயப் படுத்திக் கொள்வதற்கும் போலி பரப்புரைகளை மேற்கொள்கிறது. இதற்காக உலகளவில் சமூகஊடகத்தில்அதிகசெல்வாக்கு செலுத்திவரும்நபர்களை அணுகி அவர்கள் மூலம் பல போலி செய்திகளை பரப்பிவருகிறது. அப்படி போலிப் பரப்புரைகளிற்காக அணுகும் நோக்குடன் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களில் ஒன்று கசிந்துள்ளது.

### சமூக ஊடக பிரபலங்களை விலைக்கு வாங்கும் இஸ்ரேல்

ஹமாஸை பயங்கரவாதிகளாகவும், இஸ்ரேலில் 40 குழந்தைகளின்தலையைவெட்டி ஹமாஸ் அமைப்பினர் கொலை செய்துள்ளனர் என்றும் போர் தொடங்கியபோது பொய்களைப் பரப்பியது இவர்கள்தான்.

இந்நிலையில் சில சமூக ஊடகப் பிரபலங்கள், இஸ்ரேலை அம்பலப்படுத்தியும் உள்ளனர். சாரா வாட்சன் என்பவர் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக தனதுடிக்டாக்(TikTok)பக்கத்தில் வீடியோ வெளியிட்டு இருந்தார்.

அந்த ஆதரவை திரும்பப் பெற வேண்டும் என இஸ்ரேலிய அரசு தன்னை அணுகி வற்புறுத்தியதாகவும், அதற்காக லஞ்சம் கொடுக்க முன் வந்ததாகவும் தனது ட்விட்டர் பக்கத்தில் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், நீங்கள் நினைப்பது நடக்காது, என் அறநெறியை உங்களால் விலைக்கு வாங்க முடியாது என அவர் ஒரு வீடியோவில் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக அவர் இன்ஸ்டாகிராமில் பதிவிட்ட பதிவையும் நீக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்காகவும் ஒரு பெரிய தொகையை பேரம்பேசியதாகவும் அதையும் தான் மறுத்துவிட்டதாகவும் அவர் வீடியோவில் தெரிவித்துள்ளார்.






அத்துடன் கிம் கர்தாஷியன், மடோனா, கேல் கடோட், கேசி நீஸ்டாட் மற்றும் பல பிரபலங்கள் ஏற்கனவே இப்போலிப் பரப்புரையில் இணைந்துள்ளனர் என்பதும் அம்பலமாகியுள்ளது. காசா பகுதியை இஸ்ரேல் இராணுவம் முற்றுகையிட்டு பாலஸ்தீனர்களின் வீடுகள், அவர்கள் பாதுகாப்பு தேடி தஞ்சம் புகுந்த மருத்துவமனைகள், தேவாலயங்கள், மசூதிகள், அம்புலன்ஸ் என அனைத்து இடங்களிலும் குண்டுகளை வீசி அழித்து வருகிறது.

மேலும்அங்குவாழும்அப்பாவி பாலஸ்தீனர்களுக்குதேவையான

### இஸ்ரேலை அம்பலப்படுத்திய ஊடகங்கள்

சுலைமான் அகமது என்ற மற்றொரு சமூக ஊடக பிரபலம், இஸ்ரேல் அரசு சமூக ஊடகத்தில் செல்வாக்கு செலுத்துபவர்களுக்கு ஒவ்வொரு வீடியோவிற்கும் கிட்டத்தட்ட 1,000 டொலர் செலுத்துகிறது என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

இதுதகவல்களைகட்டுப்படுத்தி உண்மைகளை திரிப்பதாகும்.

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir



# வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான நிபுணத்துவ உதவிவழங்க வியட்நாம் இணக்கம்

முன்மொழியப்பட்டுள்ள புதிய முதலீட்டுசட்டமூலத்தைவரைவதிலும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதிலும் நிபுணத்துவ அறிவை வழங்க வியட்நாம் இணக்கம் தெரிவித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் வியட்நாம் கம்யூனிஸ்ட்கட்சியின்மத்தியகுழு உறுப்பினர் கலாநிதி புய் வான் கிம் உள்ளிட்ட தூதுக்குழுவினருக்கும் இடையிலான சந்திப்பின்போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

வியட்நாமின் சுதந்திரப் போராட்டத்தின் பின்னர் அந்த நாடு அடைந்தவிரைவானபொருளாதார வளர்ச்சியை பிரதமர் இதன்போது பாராட்டினார்.

வெளிநாட்டு முதலீடுகளை வெற்றிகரமாக ஈர்ப்பதற்காக வியட்நாம் பின்பற்றிய புதிய வழிமுறைகளைப் பாராட்டிய பிரதமர், இலங்கை விரைவில் புதிய வெளிநாட்டு முதலீட்டுச் சட்டமூலத்தை வரையத் திட்டமிட்டுள்ளதால், அதற்காக வியட்நாமின்நிபுணத்துவஅறிவை எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

பிரதமரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கலாநிதி புய் வான் கிம், இலங்கையை வியட்நாம் ஒரு சிறப்பான நட்பு நாடாகக் கருதுவதாகவும், இருதரப்பு வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற் றும் கலாசார உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்குப் பெரும்வாய்ப்புகள்இருப்பதாகவும் தெரிவித்தார்.

வியட்நாமின் அரிசி மையமாகஅறியப்படும்அரிசிமற்றும்பிற விவசாயப் பொருள்களுக்கு பெயர் பெற்ற வின் லாங் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தனக்கு மாகாணமட்டத்தில்ஒத்துழைப்பை ஏற்படுத்த முடியும் என்றும், இதனால் இலங்கையின் மாகாணங்கள் பரஸ்பர நன்மைகளைப் பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

வர்த்தகம், சுற்றுலா, கைத்தொழில், விவசாயம், கலாசாரம், கல்வி, முதலீடு மற்றும் சுற்றுலா, வர்த்தகம் உள்ளிட்ட வணிக மற்றும்பொருளாதார நடவடிக்கைகள் போன்ற துறைகளில் இருதரப்பு உறவுகளைமேலும்வலுப்படுத்துவது குறித்தும் வியட்நாம் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

தூதுக்குழுவின் தலைவரான கலாநிதி புய் வான் கிம், வியட்நாம் அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சருக்கு நிகரான அதிகாரங்களைக்கொண்ட வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி உயர்பீடத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஆவார்.

இந்தஉயர்மட்டதூதுக்குழுவில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் மத்திய வெளியுறவு ஆணைக்குழு அதிகாரிகள் உள்ளிட்ட சிரேஷ்ட வியட்நாமிய அரச அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

(05)

# இஸ்ரேலின் நவீன.......








(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்காவைப் போலவே உலகில் உள்ள மக்களுக்கு நீங்கள் (இஸ்ரேலிய அரசு) செய்யும் கொடூரமானவியங்களைநியாயப்படுத்த இப்படி பொய்களைப் பரப்பகிறீர்கள் என்று அவர் இஸ்ரேலின் செயல்பாட்டை கடுமையாக விமர்சித்துள்ளார்.

### போலிப் பரப்புரை உக்திகள்

இஸ்ரேலின் போலிப் பரப்புரைக் குழு கிம் கர்தாஷியன், மடோனா, கேல் கடோட், கேசி நீஸ்டாட் மற்றும் பல பிரபலங்கள் இப்போலிப்பரப்புரையில் இணைந்துள்ளனர்என்பதும்அம்பலமாகியுள்ளதால் தற்போது இத்தகைய சமூக வலைத்தளங்களில் வேறு பரப்புரை வீடியோக்களை வெளியிட்டு உலகை இஸ்ரேல் ஏமாற்ற முயல்வது தெளிவாகி உள்ளது.

ஈராக் போருக்கு முன்பாக அமெரிக்கா எவ்வண்ணம் போலிச் செய்திகளைசமூகஊடகங்களில்பரப்பியதோ. அதற்கு ஒப்பாக தற்போதைய காஸா போரில் சமூக ஊடக பிரபலங்களுக்கு இஸ்ரேலின் 'டிஜிட்டல் ஆர்மி' (Digital Army) பணம் கொடுத்து வருவது அம்பலமாகியுள்ளது.

இதற்காகவே இஸ்ரேலின் போலிப் பரப்புரைக் குழு HAMASisISIS மற்றும் StandWithIsrael என்ற ஹேஷ்டேக்குகளுடன் எக்ஸ் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் பல வீடியோக்களை வெளியிட்டுள்ளமை என்பது போரின் கொடூரத்தை மறைக்கும் முயற்சியாகவே கருதப்படுகிறது. அத்துடன் இஸ்ரேல் தனது போர் குற்றங்களையும் இனப்படுகொலையையும் மறைத்து உலக மக்களின் அனுதாபங்களைத் தனது பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காகவே இத்தகைய போலிப் பரப்புரை உக்திகளை பயன்படுத்துகிறது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# போதை கடத்தல்காரர்களை கைதுசெய்ய முற்பட்ட இரு பொலிஸார் மீது தாக்குதல்

## 3 பெண்கள் உட்பட 9 பேர் கைது

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பிரதான இரு சந்நேக நபர்களைக் கைதுசெய்ய முற்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கிய சம்பவத்தில் 3 பெண்கள் உட்பட 9 பேர் கொழும்பு தெற்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு தெற்கு பொலி-ஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையின் போது போதைப்பொருள் வழங்கிய பிரதான இரு சந்தேக நபர்கள் குறித்து பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

பிரதான இரு சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது குறித்த இரு சந்தேக நபர்களும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று கொழும்பு தெற்கு பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிற்குள் நுழைந்துள்ளனர்.

அவர்களைப் பின்தொடர்ந்து துரத்திச்சென்று அவர்களைக் கைதுசெய்ய முற்பட்ட போது அங்கிருந்த சில நபர்கள் பொலிஸாரைத் தடுத்ததுடன் தாக்குதலை மேற்கொண்டு அவர்கள் மீது பெற்றோல் ஊற்றி தீ வைக்க முற்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலின் போது கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் தப்பிச்சென்றுள்ளனர்.

தொடர்ந்தும் சில நபர்கள் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் ஆயுதங்களால் தாக்க முற்பட்ட போது பாதுகாப்பிற்காக பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இதையடுத்து இரு பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கடமையாற்ற விடாமல் தாக்கிய சந்தேக நபர்களும் அவர்கள் வைத்திருந்த இரண்டு பெற்றோல் போத்தல்களுடன் கைது செய்-யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 24, 44 வயதுடைய ஆண்களும் 30, 54 மற்றும் 60 வயதுடைய பெண்களும் ஆவர்.

இவர்கள் கொழுப்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் நவம்பர் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என பொலி-ஸார் தெரிவிக்கின்றனர்.

தப்பிச்சென்ற இரு பிரதான சந்தேக நபர்களை கைதுசெய்யும் நடவடிக்கையில் கொழும்பு தெற்கு பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர். (05)

# விடுதலைபோராட்ட திரைப்படங்கள், நாடகங்களில் நடித்து பிரபலமான மாணிக்கம் ஏரம்பு காலமானார்



விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களது போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாக நாடகங்கள் மற்றும்திரைப்படங்கள்போன்றவற்றில் தனது கலைப் பங்களிப்பை வழங்கிய மாணிக்கம் ஏரம்பு சனிக்கிழமை அதிகாலையில் வட்டுக்கோட்டை துணவி பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

23.04.1942 அன்று பிறந்த இவர் சிறு வயது தொடக்கம் நடிப்பில் ஆர்வம் கொண்டு பல மேடை நாடகங்களில் நடித்து வந்தார்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களது தனி ஈழப் போராட்டம் வலுப்பெறுவதற்கு தன்னாலான கலைப் பங்களிப்பை வழங்கி வந்தார்.

போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் கூத்துக்கள் உள்ளிட்ட நாடகங்களில் தனது பங்களிப்பை வழங்கி வந்ததுடன், அவை சார்ந்த கலைஞர்களுக்கு பல்வேறு வகையில் வழிகாட்டி வந்தார்.

அத்துடன், வெளிநாடுகளுக்கு சென்றும் தனது நாடகங்களை வழங்கி ரசிகர்களைக் கவர்ந்தார்.

இவர் வயது மூப்பு காரணமாக தனது 91 ஆவது வயதில் மறைந்தார். இலங்கையின் திரைத்துறைக்கு இவரது மறைவு பேரிழப்பாகும். (05)

# பதுரலியவில் நீச்சல் தடாகத்தில் வீழ்ந்து ஆறு வயதுச் சிறுமி சாவு

களுத்துறை - பதுரலிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் வீழ்ந்து 6 வயது சிறுமி ஒருவர் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளதாக பதுரலிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் வெலிவேரிய பிரதேசத்தை சேர்ந்த தனேஷி ஆருத்யா என்ற 6 வயது சிறுமி ஆவார்.

இவர் பெற்றோருடன் பதுரலிய பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றிற்கு சென்றிருந்த போது நீச்சல் தடாகத்தில் வீழ்ந்து நீரில் மூழ்கியுள்ளார்.

பின்னர் சிறுமி அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு நாகொட போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுரலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஆசிரியர் எனக்கூறி பண மோசடியில் ஈடுபட்ட இருவர் சந்தேகத்தில் கைது

கிராந்துருகோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பண மோசடி தொடர்பான குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் இருவர் கிராந்துருகோட்டை பொலிஸாரால் கைது செய்-யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிராந்துருகோட்டை பிரதேசத்தை சேர்ந்த 25 ,37 வயதுடையவர்கள் ஆவர்.

இவர்கள் பல்வேறு பிரதேசங்களில் தங்களை ஆசிரியர்கள் என கூறி பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களிடம் தொலைபேசி அழைப்பு மூலம் பிள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக கூறி சிகிச்சைக்காக பணத்தை தமது வங்கி கணக்கில் வைப்பு செய்யுமாறு கோரி பண மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் சுமார் 25 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளனர் என பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறான போலி தொலைபேசி அழைப்பு தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் இவ்வாறான அழைப்புகளில் சிக்கினால் உடனடியாக தகவல் வழங்குமாறும் பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக் குகொண்டுள்ளனர். (05)




காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண ஆளுநர் பதவிக்கு நஷீர் அஹமட்டை நியமிக்க முடிவு?

## வெளியான பரபரப்புத் தகவல்

கிழக்கு மாகாண ஆளுநராக பதவி வகித்து வரும் செந்தில் தொண்டமானை நீக்கி அண்மையில் பதவி இழந்த முன்னாள் அமைச்சர் நஷீர் அஹமட்டுக்கு அப்பதவியை வழங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று சிங்கள வார இதழ் ஒன்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த வார இதழின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மாகாண ஆளுநர்கள் பலரை இடமாற்றம் செய்ய ரணில் அரசு திட்டமிட்டுள்ளது என செய்தி கிடைத்துள்ளது.

அதன்மூலம் அண்மையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் பதவி இழந்த முன்னாள் அமைச்சர் நஷீர் அஹமட்டுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பதவி வழங்கப்படவுள்ளது என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் பதவி வகிக்கும் செந்தில் தொண்டமான் ஊவா மாகாண ஆளுநராகவும், தற்போதைய ஊவா மாகாண ஆளுநரான ஏ.ஜே.எம். முஸம்மில் மேல் மாகாண ஆளுநர் பதவிக்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, தற்போது மேல் மாகாண ஆளுநராக பதவி வகிக்கும் முன்னாள் விமானப்படைத் தளபதி றொஷான் குணதிலக்கவுக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி கிடைக்க வாய்ப்புள்ளது என அறியமுடிகின்றது.

இந்த நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என அந்த சிங்கள வார இதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# உயர்ஸ்தானிகர், தூதுவர் நியமனத்துக்கு அனுமதி

## நாடாளுமன்ற உயர் பதவிகள் குழு வழங்கியது

இந்தியா, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கான புதிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவரை நியமிக்க நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக திருமதி கே.டி.செனவிரத்னவை நியமிப்பதற்கும், ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக எஸ்.ஆர்.பி. போகல்லாகமவை நியமிப்பதற்கும் உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிங்கப்பூருக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக டீ.டீ.எம்.எஸ்.பி. திசாநாயக்க, பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவராக டபிள்யூ.கே.சி.வீரசுமனவை நியமிக்க உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது. (05)

# தேங்காய் திருடன் மீது கந்தானையில் சூடு

கந்தானை கட்டுவெல்லேகம பிரதேசத்தில் தென்னந்தோட்டம் ஒன்றில் தேங்காய் திருடிக்கொண்டிருந்த நபர் ஒருவரை தோட்ட காவலாளி துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்தியுள்ளார்.

காயமடைந்தவர் கந்தானை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவராவார். இவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பாதுக்க வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தானை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# ரயிலுடன் மோதி யானை சாவு மொனரதென்னயில் சம்பவம்

பொலன்னறுவை -மட்டக்களப்பு பிரதான ரயில் பாதையின் வெலிகந்தை மொனரதென்ன பகுதியில் ரயிலில் மோதி யானை உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் சனிக்கிழமை அதிகாலை 2.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மொனரதென்ன பிரதேசத்தில் இதுவரையில் மூன்று யானைகள் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளன என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (05)

# யாழ். இந்து மற்றும் பொஸ்கோ பாடசாலைகளில் 323 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

2023ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் இரண்டு முன்னணிப் பாடசாலைகளில் 323 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைப் பெற்று சித்தியடைந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அந்தவகையில், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் 161 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து இம்முறை 266 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 161 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைப் பெற்று சித்தி பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

அதேவேளை, யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 162 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைப் பெற்று சித்தி பெற்று சித்தியடைந்துள்ளனர். (05)

## சனிக்கிழமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளிடம் சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படவுள்ளனர் என்றும் கடற்படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்திருந்தன. இது தொடர்பில் இந்த விடயம் தொடர்பில் கடற்படை ஊடகப்பேச்சாளரிடம் வினவியபோது இந்திய மீனவர்கள் 22 பேரும் உடனடியாகவே விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தமிழகத்தின் நாகப்பட்டினம் மற்றும் காரைக்கால் பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும், கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்து வரப்பட்டனர் என்றும், மயிலிட்டி துறைமுகத்தில் வைத்து கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் அவர்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கடற்படை ஊடகப்பிரிவு குறிப்பிட்டிருந்தது.

சந்தேகநபர்கள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவிருந்த நிலையில் குறித்த 22 பேரும் திடீரென விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த 22 மீனவர்களும் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர். அதற்கமைவாகவே அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவிருந்தோம். இருப்பினும் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது அவர்கள் பயணித்த படகு இயந்திர கோளாறு காரணமாக நாட்டின் கடற்பரப்புக்குள் இழுத்து வரப்பட்டமை தெரியவந்தது. இதனால் குறித்த படகு நேற்றுகாலை இலங்கை கடற்படையினரால் பழுது பார்க்கப்பட்டு மீள மீனவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தோம் என்றார் கடற்படைப் பேச்சாளர்.

இதேவேளை இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 196 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து 29 மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று கடற்படை தெரிவித்தது.

## பொருளாதார.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களே அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக உள்ளனர் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியால் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பில் ராஜபக்ஷக்கள் உள்ளிட்டவர்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக அடையாளம் காண்பிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்கள் மீது நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் எவ்விதமான கட்டளைகளையும் வழங்கப்படவில்லை.

அவ்வாறான ஒரு சூழலில் ஜனாதிபதி விசாரணைக் குழுவொன்றை நியமித்து குறித்த விடயம் சம்பந்தமாக சந்கேம் உள்ளநபர்கள் அனைவரிடத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

அவவ்விதமான விசேட விசாரணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வருவாரா என்பது தொடர்பில் கேள்விகள் உள்ளன.

ஏனென்றால், அவர் ராஜபக்ஷக்களின் ஆதரவுடன் ஆட்சியில் இருக்கின்ற நிலையில் எவ்விதமாக நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்பது பெரும் கேள்வியாகும். ஆகவே நிச்சயமாக அவர் குறித்த விடயம் சம்பந்தமாக எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்காதிருப்பதற்கே பார்ப்பார்.

அவ்விதமான நிலைப்பாட்டில் உள்ள ஒருதலைவரால் இந்த நாட்டின் நெருக்கடிகளைத் தீர்ப்பது தொடர்பில் எப்படி உத்தரவாதங்களை வழங்க முடியும்? - என்றார்.

## மின்சாரம், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுக்கமைய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இவ்வறிவித்தலின் மூலம் மின்சாரம், எரிபொருள் உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகிய சேவைகளை வழங்குவதை அத்தியாவசியமாக பிரகடனப்படுத்துகின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




# தலைவிரித்தாடும் வெளிநாட்டு மோகம் யாழில் கோடிக்கணக்கில் பண மோசடி

## பொலிஸார் எச்சரிக்கை

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகப் பணம் கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களில் வெகுவாக அதிகரித்துள்ளன.

இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விாந்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் மட்டும் இவ்வாறான பண மோசடி தொடர்பான 7 முறைப்பாடுகள் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த முறைப்பாடுகளின் அடிப்படையில், வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து இரண்டரைக் கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு ஆள்களை அனுப்பும் முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்களே மோசடியில் ஈடுபடுகின்றனர்.

சமூக வலைத்தளங்கள் மற்றும் வட்ஸ் அப் குழுக்களில் காணப்படும் விளம்பரங்களை நம்பியே பெரும்பாலானவர்கள் மோசடியாளர்களிடம் சிக்கியுள்ளனர். மோசடியாளர் கள் போலியான விசா ஆவணங்களைக் காட்டி நம்ப வைத்து ஏமாற்றியுள்ளனர். வெளிநாடுகளில் உள்ளவர்கள் இங்குள்ள உறவினர்களை அழைக்க முடியும் என்ற நடைமுறையைக் காட்டியும் பல மோசடிகள் நடந்துள்ளன.

முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்கள் பல்வேறு காரணங்களைத் தெரிவித்து ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பணம் கோரியுள்ளனர்.

இதற்கான பணம் பல தடவைகள் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் முகவர்கள் என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொள்பவர்களின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த மாதம் மட்டும் இவ்வாறான 10 முறைப்பாடுகள் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் பதிவாகியுள்ளன.

சுமார் 6 கோடி ரூபா வரையில் மோசடி செய்யப்பட்டுள்ளமை இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறைப்பாட்டாளர்களும் பல லட்சங்களை மோசடியாளர்களிடம் இழந்துள்ளனர்.

சமூக வலைத்தளங்களிலும், குழுக்களிலும் பகிரப்படும் விளம்பரங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும், பயண முகவர் கள் என்று அறிமுகப்படுத்திக்கொள்பவர்கள் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்டவர்களா என்பதைப் பொதுமக்கள் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம் என்றும் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ரணில் புகழ் பாடும் அமைச்சர் டக்ளஸ்



வளர்ச்சியடைந்த நாடுகள் மட்டுமன்றி வல்லரசு நாடுகளும் கூட பொருளாதார வீழ்ச்சி கண்ட வேளை வளர்ந்து வரும் நாடாகிய இலங்கைத் தீவை தன் ஆளுமையால் தற்காத்தவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

தென்னிலங்கை எமக்கு தீர்வு வழங்காதென்று சுயலாபக் கூச்சலிடுவோர் இதே ஆளுமை மிக்க ரணில் விக்ரமசிங்க அவர்களுடன் நான்காண்டுகள் தேன் நிலவு கொண்டாடி மகிழ்ந்தனர். எதை அவர்கள் சாதித்தனர்? இதற்கு நீங்கள் ஆயிரம் வியாக்கியானங்கள் கொடுத்தாலும் போதிய அரசியல் பலத்தோடு இருந்தும் நீங்கள் மாபெரும் வரலாற்றுத் தவறு விட்டமையை அது பதிவு செய்துள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் தமது உதடுகளுக்குதாமே சீல் வைத்துக் கொண்டவர்கள் இவர்கள். இன்று அரசாங்கம் நல்லிணக்கத்திற்கு சீல் வைத்திருக்கிறது என்று சுதந்திரமாக பேசுகிறார்கள். நல்ல மாற்றம். வரவேற்கிறேன். சமாதானத்திற்கான கதவுகளை அரசாங்கம் இறுக மூடியிருப்பதாகச் சொல்கிறார்கள்.

பாவம் அவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள். செவியிருந்தும் செவிடர்கள். கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார். செவியிழந்த மனிதர் முன்னே பாடலிசைத்தார். எத்தனை வாய்ப்புகள் கிடைத்தும் அத்தனையும் பன்றிக்கு முன்னால் வீசப்பட்ட முத்தாகப் போய் விட்டன.

இலங்கை -இந்திய ஒப்பந்தம். இதை ஏற்றுக்கொண்ட ஒரு கட்சியின் காலில் விழுந்து, இடுப்பைப் பிடித்து, மெல்ல எழுந்து, கழுத்தை நெரிக்கும் அந்த வாத்தியார் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட ஒருவராகவே பார்க்கப்படுகிறார். தென்னிலங்கை இறுகப் பூட்டி வைத்திருக்காம். ஒப்புக்கொள்ளலாம். அது இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முந்திய வரலாறு.

சந்திரிகா அம்மையார் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை விட பல மடங்கு முன்னேற்றகரமான தீர்வை முன் வைத்த போது இந்த வாத்தியார் இன்று தொத்தி ஏறியிருக்கும் கட்சி அன்று அதை எதிர்த்து கொழும்பில் ஊர்வலம் போனது. எந்த அடிப்படையில் போனீர்கள்? அப்போது இந்த வாத்தியார் தன் கண்களுக்கும் காதுகளுக்கும் சீல் வைத்துக்கொண்டிருந்தாரா? அல்லது கட்டாயப் பயிற்சியில் விறகுக்கட்டை ஏந்திக்கொண்டிருந்தாரா?

ஜனாதிபதி அவர்கள் மக்களுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்க்கத் தயாராக இருக்கின்றார். ஆகையால் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எனவே, இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய வழிமுறைகளையும், எமது நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகளையும் நன்கு அறிந்தவரும் அவரேயாவார்.

அந்த வகையில்தான் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை அவர் முன்வைத்திருக்கின்றார் என்பதை நான் இங்கு கூறியே ஆக வேண்டும்.

எமது நாடு எத்தகைய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டு வருகின்றது என்பதை யாரும் மறந்துவிடவோ, மறுத்துவிடவோ முடியாது.

இந்த நாடு, சூழ்ச்சிகரமான இக்கட்டு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த காலகட்டத்தில், இந்த நாட்டைப் பொறுப்பேற்க எவருமே முன்வராத நிலையில், தைரியமாக முன்வந்து இந்த நாட்டைப் பொறுப்பேற்ற ஒரே யொரு தலைவர் எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதான். - என்றார். (05)

# பொருளாதார பாதிப்புக்கு யார் காரணம் நீதிமன்றம் தெளிவாக அறிவித்துள்ளது

## மைத்திரி இடித்துரைப்பு

பொருளாதார பாதிப்புக்கு யார் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை உயர்நீதிமன்றம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தியுள்ளது.

நீதிமன்றத்துக்கு எமது கௌரவத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். தீர்ப்பு வழங்கிய நீதியரசர்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அழைத்து விசாரணை செய்ய எவருக்கும் தகைமை இல்லை.

நாடாளுமன்ற தெரிவுக்குழு தோல்வியடைந்துள்ளது. ஆகவே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதாரப் பாதிப்புக்கு யார் காரணம் என்று இதுவரை காலமும் பேசப்பட்ட விடயத்துக்கு உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை தற்போது வழங்கியுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எமது கௌரவத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் ஆளும் தரப்பினர் மாறுபட்ட கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்கள். நாடாளுமன்ற தெரிவுக்குழு ஊடாக இந்த வழக்கு விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவும், நீதியரசர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்யவும் பேசுகிறார்கள்.

நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தும் தகைமை இங்கு எவருக்கும் கிடையாது. நாடாளுமன்ற தெரிவு குழுக்கள் தோல்வி என்பதற்கு பல விடயங்கள் சான்றாக உள்ளன.

நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்துக் கொண்டிருக்காமல் உரிய தரப்பினர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தினால் நாட்டு மக்கள் நாடாளுமன்றத்தை கடுமையாக விமர்சிப்பார்கள். மிகுதியாக இருக்கும் கௌரவமும் இல்லாமல் போகும்.

பொருளாதார மீட்சிக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த சிறந்த திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின் பின்னர் இடைநிறுத்தப்பட்டன. அதன் சாபத்தையே இன்று அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

பொருளாதாரப் பாதிப்பால் சமூகக் கட்டமைப்பில் போதைப்பொருள் வியாபாரம், விபச்சாரம் போன்ற சமூக விரோத செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. இது சிறந்ததொரு நிலையல்ல.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் -04 நிறுவனம் வெளியிட்ட காணொளிகள் வெறும் திரைப்படமாக்கப்பட்டுள்ளன.

சனல்-4 வெளியிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். - என்றார். (05)



# திருட்டுபோன நகை சாவகச்சேரியில் மீட்பு பொலிஸாரின் துரித நடவடிக்கையினால்



சாவகச்சேரிப் பொலிஸாரின் துரித நடவடிக்கை மூலம் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்த திருட்டுச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருப்பதுடன் திருட்டுப் பொருள் மற்றும் திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார்சைக்கிள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் கடந்த 06-11-2023 அன்று நண்பகல் வேளை தனது பிள்ளைகளை பாடசாலையில் இருந்து ஏற்றி வரச் சென்ற பெண் ஒருவருடைய மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு பவுண் சங்கிலியை மோட்டார்சைக்கிளில் வந்த சந்தேகநபர் அறுத்துக்கொண்டு தப்பித்திருந்தார்.

இந்நிலையில், இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விரைந்து செயற்பட்ட பொலிஸார் சி.சி.ரி.வி கேமராவை அடிப்படையாக கொண்டு கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞன் ஒருவரைக் கடந்த 14 ஆம் திகதி கைது செய்ததுடன் அறுக்கப்பட்ட சங்கிலி, திருட்டுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், திருட்டு தினத்தன்று அணிந்திருந்த உடை ஆகியவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபரைக் கடந்த 14 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ராஜபக்சவினர் போர்வெற்றியை பயன்படுத்திக்கொண்டு செய்தவையே நீதிமன்ற தீர்ப்பின் மூலம் அம்பலமாகின

## தலதா அத்துக்கோரள சாட்டை



யுத்த வெற்றியை முன்னிலைப்படுத்திக் கொண்டு ராஜபக்சவினர் நாட்டில் மேற்கொண்டுவந்த விடயங்கள் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் தற்போது அம்பலமாகி இருக்கின்றன. அத்துடன் நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் அதனை வீதியில் சொல்லிக்கொண்டிருக்காமல் நீதிமன்றத்துக்கு சென்று தெரிவிக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக் கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இந்த நாட்டின் சிரேஷ்ட நபர் ஒருவருக்காக நடத்தப்பட்ட நிகழ்வில் படித்த நபர் என நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள ஒருவர், ராஜபக்ஷவினருக்கு எதிராக உயர் நீதிமன்றம் வழங்கி இருக்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதும் இல்லை, ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதும் இல்லை. தேவை என்றால் எங்களுக்கு பொது மக்களை வீதிக்கு கொண்டுவர முடியும் எனத் தெரிவித்திருந்தார்.

நாடு தற்போது சரியான திசைக்கு பயணிக்க ஆரம்பித்திருக்கும்போது ராஜபக்சவினரைப் பாதுகாக்க இருக்கும் இந்த படித்தவர்கள் என்ற குழுவினர், அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக நாட்டு மக்களை பலிக்கடாவாக்க முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

அத்துடன் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பதை ஏற்றுக்கொள்வதில்லை என மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருக்கிறார். இந்நிலையில் தற்போது இந்தத் தீர்ப்பு தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த வரலாறு எங்களுக்கு தெரியும். தெரிவுக்குழு அமைத்து நாட்டில் நீதித்துறையின் உயர் பதவிக்கு கைவைத்த வரலாறு இந்த நாடாளுமன்றத்துக்கு இருக்கிறது. அன்று பிரதமநீதியரசராக இருந்த ஷிரானி பண்டார நாயக்கவை நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு கொண்டுவந்து அவருக்கு எதிராகக் குற்றப் பிரேரணை சமர்ப்பித்து அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கிய வரலாற்றை எங்களுக்கு மறக்க முடியாது.

அதனால் இந்த வரலாற்றுக்குள் இருந்து தொடர்ந்தும் நாங்கள் செயற்படுவதென்றால், உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு இணங்க முடியாது என்றால், அது தொடர்பில் பல்வேறு கீழ் மட்டத்தில் இருந்து கதைத்துக்கொண்டிருக்காமல் அதனை நீதிமன்றத்துக்கு சென்று தீர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் யுத்தம் செய்து நாட்டைப் பாதுகாத்ததாகத் தெரிவித்தாலும் யுத்தத்துக்கு தேவையான பணத்தை பெற்றுக்கொள்ள முடியுமாகியது, ஜேஆர். ஜனாதிபதி 77இல் ஆட்சிக்கு வந்து நாட்டில் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பித்து ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க எடுத்த வேலைத்திட்டங்கள் மூலமாகும். அதனால் ராஜபக்சவினர் யுத்த வெற்றியை முன்னலைப்படுத்திக்கொண்டு செய்த விடயங்களால், தற்போது நாடு ஏற்றுக்கொண்டுள்ள நிலைப்பாடுதான் நாட்டின் அனைத்து விடயங்களுக்கும் ராஜபக்சவினர் பொறுப்புக்கூற வேண்டும் என்பதாகும். - என்றார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஓட்டோ கட்டணங்களால் ஓடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir






# காணாமற்போன நால்வர் மீட்பு!

மாரவில - முதுகட்டுவ பகுதியில் மீன்பிடிப்பதற்காக கடலுக்கு சென்று காணாமல் போயிருந்த ஜப்பானிய பிரஜை உள்ளிட்ட 4 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடற்படையினரும் குறித்த பகுதியில் உள்ள மீனவர்களும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின்போது அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஜப்பான் பிரஜை உள்ளிட்ட 6 பேர் மீன்பிடிப்பதற்காக படகொன்றில் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, வெள்ளிக்கிழமை பெய்த அதிக மழை காரணமாக குறித்த படகு கவிழ்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதனையடுத்து, படகைச் செலுத்தியவர் உட்பட இருவர் பாதுகாப்பாகக் கரைக்குவந்துள்ளனர். (05)

# ஆசிரியருக்குப் பிணை

யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியில் உள்ள பாடசாலையில் மாணவனை தாக்கிய ஆசிரியொருவர் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவரொருவர் பாடசாலைக்கு வராத நிலையில் ஆசிரியரால் தாக்கப்பட்டுள்ளார்.

மாணவன் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஆசிரியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விசாரணையின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட ஆசிரியர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (05)

# ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 253 பேர் புதியவரி செலுத்த புதிதாகப் பதிவு

இந்த ஆண்டில் இதுவரை ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 253 புதிய வரி செலுத்துபவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கோபா குழுவிற்கு அழைக்கப்பட்டபோதே இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, 18 வயதுக்கும் மேற்பட்ட சுமார் 16 மில்லியன் மக்கள் வரி செலுத்துபவர்களாக உள்ளனர்.

தற்போது சுமார் 13000 நிறுவனங்கள் வற் எனப்படும் பெறுமதி சேர் வரி செலுத்துவதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அவர்களில் பலரும் வரி ஏய்ப்பு செய்வதால், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இதற்கு முன்னர் சுயுஆஐளு எனும் வருமான நிர்வாக முறையைப் பயன்படுத்தி வரி வசூலை ஒழுங்குபடுத்துவதற்கு தீர்மானித்திருந்தது.

எனினும் அந்த முறையில் சிக்கல்கள் இருப்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் கோப் குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.11.2023இல் வெளியிடப்பெற்றது.